**செய்தி வெளியீடு எண்: 284** **நாள்: 11/05/2012**

## பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களில் மே 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 12.05.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்களின் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப்பள்ளி ,<br>178, போர்ச்சுகீசியர் சர்ச் தெரு, ஏழு கிணறு, சென்னை -1 |
| 2 | இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி, கும்மாளம்மான் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை 81 |
| 3 | பெரம்பூர் | திருவள்ளுவர் கூட்டுறவு திருமண மாளிகை,<br>29, கார்த்திகேயன் சாலை, பெரியார் நகர்,<br>சென்னை - 82 |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>286, ஈ.வே.ரா நெடுஞ்சாலை, அமைந்தகரை,சென்னை- 29 |
| 5 | அம்பத்தூர் | அம்பத்தூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>பாடிக்குப்பம், சென்னை - 107 |
| 6 | வில்லிவாக்கம் | குட்வில் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி,<br>55, எஸ்.ஆர்.பி நகர், 5 வது தெரு, கொளத்தூர், சென்னை – 99 – FF 047 பாபா நகர், சென்னை - 99 |
| 7 | திருவொற்றியூர் | அரசு உயர் நிலைப்பள்ளி, ( கன்னியாகுருகுலம்) வரதராஜன் தெரு, சாத்துமா நகர், திருவொற்றியூர், சென்னை - 19 |
| 8 | ஆவடி | பட்டர்பிளை மெட்ரிக்குலேஷன் பள்ளி, 18, மசூதி தெரு, டிபன்ஸ் என்கிளேவ், முக்தா புதுப்பேட்டை, சென்னை - 55 |

| | | |
|---|---|---|
| 9 | தி.நகர் | ஆதி திராவிடர் நலப்பள்ளி, எண் 2, ஆற்காடு சாலை, வளசரவாக்கம், சென்னை - 87 |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மேல்நிலைப்பள்ளி, 12, பீமண்ணா கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை -98 |
| 11 | பரங்கிமலை | ஆலந்தூர் இந்துமத நடுநிலைப்பள்ளி, எம்.கே.என் ரோடு,ஆலந்தூர், சென்னை - 61 (ஆலந்தூர் மின்வாரிய அலுவலகம் அருகில்) |
| 12 | தாம்பரம் | விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக்குலேசன் பள்ளி, ஊராட்சி மன்ற சாலை, முடிச்சூர், சென்னை - 48 |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை உயர்நிலைப்பள்ளி, ஏரிக்கரை தெரு, நெசப்பாக்கம், சென்னை - 78 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி, 71/30, கிரியப்பா சாலை, தி நகர், சென்னை – 17 ( GRT ஹோட்டல் பின்புறம்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி, 10 பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14 |
| 16 | சோழங்கநல்லூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, மாம்பாக்கம் மெயின் ரோடு, மேடவாக்கம், சென்னை – 100 ( மேடவாக்கம் ஊராட்சி அலுவலகத்திற்கு அருகில்) |

**ஆணையர்**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**